# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஆகஸ்ட் 10, 2019

Weekly E-paper • AUGUST 10, 2019





# பாஜகவின் சூதாட்டம்?

• கோ.மால்மருகன்



**செம்மொழி நிறுவனம் காப்போம்!**

**வேலூர்**

கொண்டாடுவோம்!
மகிழ்வோடும், எச்சரிக்கையோடும்!

தலையங்கம்




**நூல் விமர்சனம்**

இக்லாஸ் உசேன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையிதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஆகஸ்ட் 10, 2019 Weekly E-paper ● AUGUST 10, 2019


# பாஜகவின் ஜம்மு-காஷ்மீர் சூதாட்டம்

● கோ.மால்மருகன்

ஆகஸ்ட் 5, 2019 என்பது ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தையும் (இனிமேல் "ஜ-கா") இந்திய நாட்டையும் புரட்டிப் போட்ட நாள் என்றால் மிகையாகாது. உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஜ-கா தொடர்பாக, மாநிலங்களவையில் இரண்டு தீர்மானங்களையும் ஒரு சட்ட மசோதாவையும் தாக்கல் செய்தார். முதல் தீர்மானமானது அரசியல்சட்டபிரிவு 370-ஐ செயலற்றதாக்குவது; மற்றொன்று ஜ-கா-வை இரண்டு ஒன்றிய பகுதிகளாகப் (Union Territories) பிரித்து மத்திய அரசு ஆட்சி செய்ய வழிவகை செய்வது. இதற்குச் சட்டவடிவம் கொடுக்கவே மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜ-கா-விற்கும் இந்திய நாட்டிற்கும் 72 ஆண்டுகளாக நீடித்துவந்த தனித்தன்மை வாய்ந்த உறவை தனக்கேயுரிய ஆணவப்போக்குடன் முடிவுக்குக் கொண்டு வந்தது மோடி அரசு. இந்த மாற்றத்தைத் தங்குதடையின்றி நிறைவேற்ற ஏதுவாக, ஜ-கா-வை ஒரு ராணுவக் கோட்டையாகவே மாற்றியிருக்கிறது மத்திய அரசு.

## ஜ-கா மாநிலம் ஒரு பார்வை

ஆகஸ்ட் 1947-இல் இந்தியா விடுதலை அடைந்த போது ஜ-கா, மன்னராட்சியின் கீழ் 2,22,000 சதுர கிமீ பரப்பளவு கொண்ட இராச்சியமாகும். அதை ஹரிசிங் என்னும் டோக்ரா மன்னர், ஆட்சி செய்து வந்தார். இந்த இராச்சியத்தில் ஏறக்குறைய 75% மக்கள் இஸ்லாமியர்களாக இருந்தனர். அதனால், இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை ஏற்படும் போது ஜ-கா, பாகிஸ்தானுடன் சேரும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. எனினும் ஹரிசிங் தன் இராச்சியம் தனி நாடாக இருக்க வேண்டும் என்றே விரும்பினார். ஆனால் பாகிஸ்தானிலிருந்து வந்த ஆயுதம் ஏந்திய ராணுவத்தினர்/ கூலிப்படையினரின் வெறியாட்டத்திலிருந்து இராச்சியத்தைக் காப்பாற்றிக்கொள்ள, ஹரிசிங், இந்தியாவுடன் ஒன்றிணைய "Instrument of Accession" என்னும் ஒப்பந்தத்தை அக்டோபர் 26, 1947 அன்று கையெழுத்திட்டார்.




இதன்பிறகு, இந்திய ராணுவம், பாகிஸ்தான் ராணுவத்தினர்/ கூலிப்படையினருடன் சண்டையிட்டு 1,01,000 சகிமீ நிலப்பரப்பை மீட்டது. இந்தப் பகுதி இந்தியாவுடன் இணைக்கப்பட்டு இந்தியாவின் ஜ-கா மாநிலமானது. ஆனால் மீதம் 1,21,000 சகிமீ பாகிஸ்தான் மற்றும் சீனாவின் வசமுள்ளது. இதுவரை இந்தியா-பாகிஸ்தான் இடையே மூன்று போர்களும் பல சிறு-சிறு சண்டைகளும் நடந்திருக்கின்றன.

ஜ-கா மாநிலம், நிர்வாகம் பொருட்டு, மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது ஜம்மு (26,300 சகிமீ), காஷ்மீர் (16,000 சகிமீ) மற்றும் லடாக் (59,100 சகிமீ). 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இவற்றின் மக்கள் தொகை முறையே 53.5, 69.1 மற்றும் 2.9 லட்சங்கள் ஆகும். இஸ்லாமியர் 68.3% ஆவர் (காஷ்மீரில் 96.4%) என்பதால் இந்தியாவிலேயே இஸ்லாமியர் பெரும்பான்மையாக உள்ள மாநிலம் ஜ-கா ஆகும்.

## அரசியலமைப்பு பிரிவுகள் 370 மற்றும் 35A சிறு விளக்கம்

1947-இல் இந்தியாவுடன் இணைந்த ஜ-கா இராச்சியத்தின் தனித்தன்மையைப் பாதுகாக்க, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தனித்துவம் வாய்ந்த 370-ஆவது பிரிவு சேர்க்கப்பட்டது. இது ஒரு தற்காலிக ஏற்பாடாக அப்போது கருதப்பட்டது. இந்த 370 பிரிவின் கீழ்தான் ஜ-கா சம்மந்தப்பட்ட சட்டங்களை, அம்மாநில அரசியலமைப்பு மன்றத்தின் ஒப்புதல் பெற்றுதான், மத்திய அரசால் இயற்ற முடியும். ஜ-கா-விற்கென்று தனியே அரசியலமைப்புச் சட்டமும் (1957) கொடியும் ஏற்படுத்தப்பட்டன.

1954 ஆம் ஆண்டு, 370 வது பிரிவைப் பயன்படுத்தி, 35A என்ற பிரிவு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்திய அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. இப்பிரிவின் கீழ், மாநில அரசால் மட்டும்தான் யாரெல்லாம் ஜ-கா-வில் நிரந்தரமாகக் குடியிருப்போர் என்று நிர்ணயிக்க முடியும். அவ்வாறாக நிர்ணயிக்கப் பட்டோர் மட்டும்தான் மாநிலத்தில்




நிரந்தரமாகக் குடியிருக்கவும், மாநில அரசின் கீழ் வேலைவாய்ப்புப் பெறவும், மாநிலத்தில் சொத்துக்களை வாங்கவும், உதவித்தொகை போன்றவை பெறவும் தகுதி உடையவர்களாகக் கருதப்படுவர்.

### சங் அமைப்புகளின் ஜ-கா மாநிலம் குறித்த நிலைப்பாடு

ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்க் (இனிமேல் "சங்க்"), 370 ஆவது பிரிவைத் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வந்துள்ளது. அதுவும் குறிப்பாக ஜ-கா மாநிலம்தான் இந்திய மாநிலங்களில் இஸ்லாமியர் பெரும்பான்மை உள்ள மாநிலம் என்பது அவர்களுக்கு கண்ணெரிச்சல் கொடுத்து வந்திருக்க வேண்டும்.

"370 ஆவது பிரிவு காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரிப்பதற்கான ஒரு ஏற்பாடு" என்றே சங்க் கருதியது. 1950-லிருந்து, இது குறித்து மொத்தம் 51 தீர்மானங்கள் சங்கினால் நிறைவேற்றப்பட்டுள்ளன. சங்க் அமைப்பின் ஒரு பிரிவாக இருந்த பாரதிய ஜனசங்கின் நிறுவனர் ஷியாமா பிரசாத் முகர்ஜி 1953 ஆம் ஆண்டு ஸ்ரீநகரில் 370 ஆவது பிரிவு தொடர்பாக சிறையிலிருந்த போது "மர்மமான" முறையில் இறந்து போனார். அதனால் சங்கிற்கு இது ஒரு உணர்ச்சிப்பூர்வமான பிரச்சனையுமாகும்.

பாரதிய ஜனசங்குக்குப் பிறகு, 1980-இல் அவதாரம் எடுத்த பாஜக, 370 ஆவது பிரிவு எதிர்ப்பு நிலைப்பாட்டைத் தொடர்ந்தது. பாஜகவின் 2019 தேர்தல் அறிக்கையில், இந்தப் பிரிவை ரத்து செய்வதற்கான யோசனை முன்னிலைப்படுத்தப்பட்டது. ஒரு தேசத்திற்குள் "இரண்டு அரசியலமைப்புகள், இரண்டு பிரதமர்கள் மற்றும் இரண்டு தேசிய சின்னங்கள்" இருக்கக்கூடாது என்பது சங்கின் உறுதியான நம்பிக்கை.

### பாஜக-வின் சூழ்ச்சியும் ஜ-கா மாநிலத்தின் வீழ்ச்சியும்

மே 2014 இல் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, மோடி அரசு, இந்தியாவை கோல்வால்கர் வடிவமைத்த இந்து நாடாக மாற்றுவதற்கு முனைப்புக் காட்டிவருகிறது.

மே 2019 மீண்டும் ஆட்சிக்குக் கூடுதல் பெரும்பான்மையுடன் வந்த மோடி அரசு, 75 நாள்களிலேயே 370 ஆவது பிரிவை (35A பிரிவும் கூட) செயலற்றதாக ஆக்கிவிட்டது. இந்த மாற்றத்தை ஏற்படுத்த மோடி அரசு மேற்கொண்ட சூழ்ச்சியை புரிந்துக்கொள்ள நாம் சற்றுப் பின்னோக்கித் திரும்பிப் பார்க்கவேண்டும்.

இதன் துவக்கப் புள்ளி, ஜூன் 2018-இல் அற்பக் காரணத்திற்காக பாஜக-பிடிபி கூட்டணி ஆட்சி கலைக்கப்பட்ட தருணமாகும். மாற்று அரசாங்கத்தை அமைப்பதற்காக பிடிபி, காங்கிரஸ் மற்றும் தேசிய மாநாட்டுக் கட்சிகள் எடுத்த முயற்சிகள் ஆளுநரால் முறியடிக்கப்பட்டன. பிறகு ஜ-கா சட்டமன்றத்தை யாரும் எதிர்ப்பாராத வகையில் நவம்பர் 2018-இல் ஆளுனரின் பரிந்துரையால் மத்திய அரசு கலைத்தது.

இதனைத் தொடர்ந்து, ஜ-கா சட்டமன்றத்திற்கான தேர்தல்கள், சட்டம் ஒழுங்கு பிரச்சனையைக் காரணம் காட்டி, மே 2019 மக்களவைத் தேர்தலுடன் நடத்தப்படவில்லை. ஒரு வேளை சட்ட மன்றத் தேர்தல் நடந்து புதிய ஆட்சி அமைந்தால் 370 பிரிவை நீக்குவது கடினமாகிப் போய்விடுமோ என்ற ஐயம் போல!

இதனால், மக்களவைத் தேர்தல் முடிந்த கையோடு, மத்திய அரசு தன்னிச்சையாகச் செயல்பட்டு, ஜ-கா-வின் சிறப்பு அந்தஸ்தை ஒழிக்க வழிசெய்து, அம்மாநிலத்தைத் துண்டாடி, மாநிலம் என்ற நிலையிலிருந்து ஒன்றியப் பகுதிகளாக தரமிறக்கி விட்டுள்ளது. இந்த மாற்றம் எதனிலும் ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு ஒரு துளி கூடப் பங்கு இல்லை என்பது தான் கொடுமையிலும் கொடுமை.

இதைப் பார்க்கையில் 370 ஆவது பிரிவைச் செயலற்றதாக ஆக்குவதற்கான திட்டம், நீண்ட நாள்களாகக் கச்சிதமாக தீட்டப்பட்ட சூழ்ச்சியோ என்ற ஐயம் ஏற்படுகிறது!

### 370-வது பிரிவு நீக்கம் என்பது ஒரு அரசியலமைப்பு மோசடியே

இந்திய அரசியலமைப்பில், பிரிவு 370 என்பது ஒரு தன்னிறைவான பிரிவாகும். பிரிவு 370-ஐ செயலற்றதாக்க வேண்டும் என்றால், துணைபிரிவுப் 370 (3) இன் விதிகளை மட்டுமே பயன்படுத்த முடியும். அந்த துணைப்பிரிவின்படி குடியரசு தலைவருக்கு ஜ-கா அரசியலமைப்பு மன்றத்திலிருந்து ஏற்ற பரிந்துரை அனுப்பப்பட்டால் அன்றி பிரிவு 370 செயலற்றதாக்க முடியாது. ஆனால் அரசியலமைப்பு மன்றம் 1956-லேயே மூடப்பட்டுவிட்டது.

மோடி அரசு, இந்த நிலையை எதிர்கொள்ளும் பொருட்டு, இந்திய அரசியலமைப்பு 367 பிரிவிற்குள், ஆகஸ்ட் 5 அன்று, ஒரு புதிய துணைப்பிரிவு (4)-ஐ புகுத்தியது. இதில் நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், 367 பிரிவு அரசியலமைப்பை விளக்குவதற்காக பொது விதிகளைக் கொண்ட ஒரு சாதாரண பிரிவேயாகும்.

இந்தத் துணைபிரிவுப் 367(4) மூலம் பிரிவு 370 (3)-இல் உள்ள ஜ-கா அரசியலமைப்பு மன்றத்திற்குப் பதிலாக மாநில சட்டமன்றத்தையும், அது இல்லாதபோது மாநில ஆளுனரையும் ஈடாகக் கருதுவதற்கு வழிவகை செய்யப்பட்டது. இதனால் மாநிலச் சட்டமன்றம் கலைக்கப்பட்டிருந்தாலும், வெறும் ஆளுனரின் பரிந்துரையால், 370 பிரிவை நாடாளுமன்றத்தால் செயலற்றதாக ஆக்கமுடிந்துள்ளது.

அதாவது 370 பிரிவை செயலற்றதாக ஆக்குவதற்கு, அதனுடன் எந்தத் தொடர்பும் இல்லாத 367 பிரிவைத் திருத்தியிருக்கிறது இந்த அரசு! இவை அனைத்திலும் ஜ-காவை சார்ந்த எந்த அரசியல்வாதியோ குடிமகளோ பங்கு பெறவில்லை என்பதுதான் நிதர்சனம்! அப்போது இது ஒரு அரசியலமைப்பு மோசடி இல்லையா?

### 370-வது பிரிவு நீக்கம் ஒரு ஓரவஞ்சனையும்கூட

நம் அரசியலமைப்புச் சட்டத்தில் 371-பிரிவின் கீழ் சில குறிப்பிட்ட மாநிலகளுக்குப் பல சிறப்புச் சலுகைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மகாராஷ்ரா, குஜராத், நாகாலாந்து, அஸ்ஸாம், மிசோராம், ஆந்திரா, தெலுங்கானா, சிக்கிம், அருணாச்சல் பிரதேசம், கோவா, கர்நாடகா ஆகியவை ஆகும். இவைகளில் நாகாலாந்து, மிசோராம் ஆகிய மாநிலங்களில் வேறு மாநிலத்தவர் நிலம் வாங்க இயலாது. வடகிழக்கில் உள்ள ஏழு மாநிலகளுக்குள் நுழையவேண்டுமானால், வேறு மாநில இந்தியர்கள் முன் அனுமதி பெறவேண்டும்.

சில மாநிலங்கள், தங்களின் மாநில உரிமைகளைப் பயன்படுத்தி, வெளி மாநிலத்தவர்கள் அசையா சொத்துகள் வாங்கவும், வேலை வாய்ப்புகள் பெறவும் தடைகள்/நிபந்தனைகள் விதித்துள்ளன.

இந்தச் சூழ்நிலையில் ஜ-கா மாநிலத்தை மட்டும் பாஜக அரசு ஏன் தனிமைப்படுத்த வேண்டும்? அங்கிருக்கும் வன்முறையைக் களைவதற்குப் பதில் இந்த அரசியல் பூகம்பத்தை ஏன் தேவையில்லாமல் ஏற்படுத்த வேண்டும்? ஜ-கா-வின் பெரும்பான்மை மக்கள் இஸ்லாமியராக இருப்பதாலா? இது ஓரவஞ்சனை ஆகாதா?

### அரசியல் சூதாட்டம் இனி வேண்டாம்!

ஆகஸ்ட் 5 ஆம் தேதி அன்று இயற்றிய சட்டமாற்றங்களை வைத்து மாநில அரசுகளைக் கவிழ்த்து, அம்மாநிலங்களைத் துண்டாடி, மத்திய அரசின் ஒன்றியப் பகுதிகளாக மாற்ற முன்மாதிரியை மோடி அரசு ஏற்படுத்தியிருக்கிறதா?

இந்த நிகழ்வுகள், கோல்வால்கரின் கனவான, "ஒரே நாடு, ஒரே அரசு, ஒரே தலைவர், ஒரே சட்டமன்றம், ஒரே நிர்வாகம்' என்ற இலக்கை நோக்கி இந்தியாவை எடுத்துச் செல்லும் முயற்சியாக இருக்குமா?

மோடி அரசு, இது போன்ற அரசியல் சூதாட்டங்களைக் கைவிட்டு, அரசியலமைப்பின் எழுத்துக்கும் உணர்வுக்கும் ஏற்ப நாட்டை நடத்தி செல்வது சாலச் சிறந்தது ஆகும்! ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

# செம்மொழி நிறுவனம் காப்போம்!





*தலைவர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் தமிழர்களின் ஓராண்டுக் கனவு நினைவாகியது. 2004 ஜூன் 6 ஆம் நாள் மத்திய அரசு தமிழைச் செம்மொழி என்று அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக, மைசூரிலிருந்து தமிழ்ச் செம்மொழி ஆய்வு நிறுவனம் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டது. 2011 வரையில் செம்மையாகச் செயல்பாட்டுக் கொண்டிருந்த அந்நிறுவனம் இப்போது படிப்படியாகச் சிதைக்கப்படுகிறது. இந்தக் கொடுமையை எடுத்துரைத்து, ஒரு விழிப்புணர்வை மக்களிடையே கொண்டுவருவதற்காக, 04.08.2019 அன்று, சென்னையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மகளிர் அணியினர் ஒரு கருத்தரங்கை நடத்தினர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி, தமிழச்சி, மற்றும் புதிய குரல் நிறுவனர் தோழர் ஓவியா ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதன் தொடர்ச்சியாக, தமிழக அமைச்சர் மற்றும் நிறுவன இயக்குனர் ஆகியோரைச் சந்தித்து மகளிர் அணியினர் கோரிக்கை மனுவைக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.*

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## கொண்டாடுவோம்!
## மகிழ்வோடும், எச்சரிக்கையோடும்!

*பரபரப்பான இன்றைய உலகில், எந்த ஒரு செய்தியும் மறுநாளே பழையதாகி விடுகிறது. கடந்த 9 ஆம் தேதி, 20க்கு 20 கிரிக்கெட் போட்டி பார்ப்பது போல அனைவரும் விறுவிறுப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த வேலூர் தேர்தல் முடிவு இன்று ஒரு சாதாரணச் செய்தி ஆகி விட்டது. இருப்பினும், அந்தத் தேர்தல் முடிவு சில செய்திகளை இன்னமும் நமக்குச் சொல்லிக்கொண்டேதான் இருக்கிறது.*

*மற்ற கட்சிகள் வெற்றி பெற்றிருந்தால் அதனைப் பெரிதாகப் பலரும் பேசியிருப்பார்கள். ஆனால் திமுக பெற்றுள்ள வெற்றியைக் கூடச் சிலர் ஒரு குறையுடன்தான் பார்க்கின்றனர். வாக்குகள் வித்தியாசம் குறைந்துபோய் விட்டது என்பதுதான் அவர்கள் சுட்டிக்காட்டும் குறை.*


*கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலோடு ஒப்பிட்டு, இந்த முறை வாக்குகள் குறைவு என்று சொல்லவில்லை. அப்படி ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த முறை மூன்று மடங்கு கூடுதலான வாக்குகளை அங்கு திமுக பெற்றுள்ளது. கடந்த மே மாதம் மற்ற தொகுதிகளில் நடந்த தேர்தலோடு ஒப்பிட்டு, அங்கெல்லாம் பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற திமுக இப்போது ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது என்கின்றனர்.*

மே மாதத்திற்கும் இன்றைய நிலைக்கும் உள்ள வேறுபாட்டை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாமா? அப்போது மத்தியில் யார் ஆட்சிக்கு வருவார்கள் என்றே தெரியாது. இன்று மாநிலத்திலும், மத்தியிலும் ஆட்சியில் உள்ள கட்சிகள் ஒருபுறமும், எதிர்க்கட்சி இன்னொரு புறமுமாகப் போட்டியிட்டன. எப்போதும் இடைத்தேர்தல் என்பது ஆளும்கட்சிகளுக்கே வாய்ப்பாக இருக்கும் என்பது வெளிப்படையான உண்மை. அப்படிப்பட்ட சூழலில், திமுக வேலூரில் பெற்றுள்ள வெற்றி மகத்தானதுதான்.

என்றாலும், நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற கருத்தை மறுக்கத் தேவையில்லை. மக்களோடு மக்களாய் இணைந்து நிற்கும் திமுகவிற்கும், செயல்பாடே இல்லாமல் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கும் அதிமுகவிற்கும் இடையில் இன்னும் மிகப் பெரிய வாக்குகள் வித்தியாசம் இருந்திருக்க வேண்டும் என்பது உண்மைதான், அதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு எதிர்காலத்தில் திமுக பணியாற்றட்டும்.

வேலூர் வெற்றியைக் கொண்டாடுவோம் - மகிழ்வோடும், எச்சரிக்கையோடும்! .

## கீதையும் குறளும்





கேள்வி: காஷ்மீர் விவகாரம் பற்றி உங்களுடைய நிலைப்பாடு என்ன?.


விஜய் சேதுபதி: "நிச்சயமா அது ஜனநாயக விரோதமானது, பெரியார் அன்னைக்கே சொல்லிட்டாரு அவங்கவங்க பிரச்சினைகளுக்கு அவங்கவங்க தான் தீர்வு காண முடியும். உங்கள் வீட்டின் மீது நான் அக்கறை செலுத்தலாம், ஆளுமை செலுத்த முடியாது, கூடாது"

கீதை படிப்பவருக்கும்(ரஜினிகாந்த்), பெரியாரைப் படிப்பவருக்குமான (விஜய் சேதுபதி) வித்தியாசம் இது.

*கீதையைப் படிப்பவர் அதிகார வர்க்கத்தின் பக்கம் நின்று பேசுகிறார், பெரியாரைப் படிப்பவர் ஒடுக்கப்படும் மக்களின் வலியில் நின்று பேசுகிறார்.*

\- முகநூலிலிருந்து

# ஒடுக்கப்பட்டோரின் எழுச்சியும் ஒடுக்கியவர்களின் வீழ்ச்சியும்




ஆசிரியர் : முனைவர் மு.இனியவன்

வெளியீடு : அறிவாயுதம் பதிப்பகம்,
1. சாஸ்திரி வீதி, எண் 4,கல்லூரிப்புதூர்,
கோவை – 641 041.

தொடர்புக்கு: 98658 52212, 93842 99877

விலை ரூ.120/–

**இக்லாஸ் உசேன்**

மறைக்கபட்ட திரிக்கப்பட்ட வரலாற்றை மீட்டு மீளுருவாக்கம் செய்து முக்கிய நூலாக வெளிவந்துள்ளது, தோழர் முனைவர் இனியவனின் முயற்சியில் ‘பீமா கோரேகான்’ நூல்

மகர்கள் வாழும் பகுதியை மகர் ராஷ்ட்ரம் என அழைத்ததைத் திரித்து, மஹாராஷ்ட்ராவாக (பெரிய நிலப்பரப்பு) மகர்களை நான்கம் தரக் குடிமக்களாக ஒடுக்கினார்கள் .

பீமா என்பது நதியின் பெயர். கோரேகான் என்பது ஒரு கிராமத்தின் பெயர். இந்த இரண்டும் இணைந்தது தான் பீமாகோரேகான்.

பீமாகோரேகான் வெற்றி என்பது சத்ரபதி சிவாஜிக்குப் பிறகு, மராட்டியத்தை ஒரு நூற்றாண்டு ஆட்சி செய்த, பேஷ்வா என்ற சித்பவன பார்ப்பன மன்னர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த முக்கிய நிகழ்வு. அதனை நினைவூட்டும் வெற்றித் தூணை மையக்கருவாகக் கொண்டதே பீமா கோரேகான் ..

சத்ரபதி சிவாஜி பற்றவைத்த கலகத்தீ, மராட்டியம் முழுக்கப் பரவியது. அது தனக்கென ஒரு ஆட்சியை அமைத்துகொள்ளும் அளவுக்கு படைபலம், செல்வத்தை எல்லாம் பெற்றது. எனினும், சிவாஜி பிறப்பின் அடிப்படையில் ஆட்சியில் அமரும் தகுதியை இழக்கிறார். சிவாஜி நான்காம் வருணமான சூத்திரச்சாதியைச் சேர்ந்தவர்.

எனவே சிவாஜி சத்ரியனைப் போல் நாட்டை ஆள, முடிசூடுவதற்கு நயவஞ்சகத்துடன் பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்த்தார்கள்.

ஆனாலும் ஏராளமான பொன்பொருள், பசு, நிலம், அமைச்சர் பதவி ஆகியவைகளைப் பெற்றுக் கொண்டு, சூத்திர சிவாஜியாக இருந்தவரை சூரியகுல சத்ரிய சிவாஜியாக ஒரு பார்ப்பனர் முடிசூட்டி வைத்தார். முடியாட்சி சிவாஜியிடம்.. அமைச்சரவை அதிகாரம் தேஷ்தா பார்ப்பனர்களிடம்.. தேஷ்தா பார்ப்பனர்கள் சித்பவன் பார்ப்பனர்களை விட உயர்ந்தவர்கள்

சிவாஜிக்குப் பிறகு அவர் மகன் சாம்பாஜி, பிறகு ராஜாராம், ராஜாராம் இறந்தபின் அவர் மனைவி தாராபாய் ஆட்சி செய்தபோது தாராபாயை எதிர்த்துச் சாகுமகராஜ் கலகம் செய்தார், ஆட்சியை இழந்தார் தாராபாய்.

தாராபாய்க்குத் துரோகம் இழைத்தது போல் சாகுமகராஜுக்கும் துரோகம் செய்து அடுத்து அரியணை ஏறியவர் பாலாஜி விஸ்வநாத்.

அவருக்குப் பின் முதலாம் பாஜிராவ் 20ஆண்டு ஆட்சி செய்தார்.

இந்த பாஜிராவ் ஆட்சியில்தான் மகர்கள் முற்றிலுமாக ராணுவ அரசு சேவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர், மேலும் தாழ்த்தபட்டவர்களாக அவர்களை அடையாளப் படுத்தும் விதமாக கைகளில் கருப்புக் கயிறு கட்டப்பட்டது.

சாலையில் நடக்கக்கூடாது, கழுத்தில் ஒரு பானை கட்டி அதில்தான் எச்சில் துப்புவேண்டும் என மகர் சமூகத்தினர் எண்ணற்ற கொடுமைகளுக்கு ஆட்பட்டனர்.

காலங்கள் மாறி, நாடுமுழுவதும் ஆங்கிலேயர் ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டனர். அங்கு நடந்த மராத்திய ஆங்கிலேயப் போரில் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, திப்புசுல்தானுடன் நடந்த மைசூர் போரின்போது ஆங்கிலேயர்க்கு மராட்டியத்தின் மொத்தக் குதிரைப்படையும் கொடுத்தனுப்பியது பேஷ்வா அரசு. திப்புவை வீழ்த்திய ஆங்கிலேய அரசு அடுத்து, மராட்டிய பேஷ்வா அரசுக்கு முடிவுரை எழுதிய இடம்தான் பீமா கோரேகான்.

ஆங்கிலேயர்களை எதிர்த்து 20ஆயிரத்துக்கு மேற்றபட்ட படைகளுடன் யுத்த களத்திற்கு வந்தார் இரண்டாம் பாஜிராவ். மெட்ராஸ் ரெஜிமென்டலில் இருந்து வந்த 800பேர் கொண்ட ஒரு சிறுபடை கோரேகான் கிராமத்தில் தங்குகிறது.

இரண்டு படைகளும் கோரேகானில் மோதின. பாஜிராவ் படை தோல்வியைச் சந்தித்தது. இந்த யுத்தத்தோடு பேஷ்வா ஆட்சி முடிவுக்கு வந்தது.

அந்த இடத்தில் ஆங்கிலேயர்களால் 65அடி உயரத்தில் நினைவுத்தூண் எழுப்பப் பட்டது. அந்த வெற்றியில் மகர் இன மக்களுக்கும் பெரும்பங்கு உண்டு.

ஆகவே 1927இல் மாமேதை அம்பேத்கர் கோரேகான் நிகழ்வில் கலந்துகொண்ட பின், அடுத்தடுத்த ஆண்டுகளில் லட்சக்கணக்கான மக்கள் கூடி மகர்களின் வெற்றியைக் கொண்டாடுவதும் ஒரு நம்பிக்கை நிகழ்வாக ஆயிற்று.

2014பிஜேபி மராட்டியத்தில் ஆட்சிக்கு வந்த பின், 2018இல் கோரேகானில் நடத்தபட்ட திட்டமிட்ட கலவரம், துப்பாக்கிசூடு, சமூக செயற்பாட்டார்களைக் கைதுசெய்வது, நினைவுத் தூணைச் சுற்றி எப்போதும் ஆயுதங்களோடு நூற்றுக்கணக்கான மத்திய மாநிலக் காவலர்களை நிற்க வைப்பது ஆகியவை இன்றுவரை தொடர்கின்றன. தோழர் இனியவனின் இந்த பீமா கோரேகான் தொடக்கத்தில் நம்மை வியப்புடன் வாசிக்க வைத்தது. பின்பு கோரேகானில் நாமே வசிக்கும் மனநிலைக்கு எழுத்தாளர் நம்மைக் கொண்டுவந்துவிடுகிறார்

பீமா கோரேகானைச் சுற்றி நடந்த, நடக்கும் அனைத்துச் செய்திகளையும் வெறும் 140 பக்கங்களில், நூல் ஆசிரியர் இனியவன் செறிவாக நமக்குக் கொடுத்து இருக்கிறார். அவருக்கு நம் பாராட்டுகள்!

பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் ஆகியோரை நேசிக்கும் அனைவருமே கட்டாயமாகப் பீமா கோரேகான் நூலைப் படித்திடவேண்டும். ●